# Chapter - 13 - Speech for 23rd July 2022

கடந்த சில அத்தியாயங்களில் சத்-சித்-ஆனந்தம், வாழ்வில் வரும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் என்று விவரித்த பகவான் அடுத்ததாக பிரம்மம் தானே பிரபஞ்சமாக மாறியதன் வழியை விவரிக்கும் முன் Process of creation -ஐ விவரிக்கும் முன் - அந்த process ஏன் எடுக்கப்பட்டது என்பதை விளக்குகிறார். அது எப்படி அனந்தமான வடிவங்களுக்கு infinite forms-க்கு இடம் கொடுக்கிறது என்பதை விளக்குகிறார். அதற்கு பிரம்மம் உபயோகிக்கும் - தன்னிடம் ஏராளமான திறமைகள் இருந்தாலும் அதிலிருந்து ஒரு திறமையை, 'cosmic capacity-ஐ ' அது உபயோகப்படுத்துவதை தெய்வீக மாயை - Divine Maya என்கிறார். அதை தன்னை வரையறுக்கும், வரைமுறைக்கு உட்படுத்தும், தனக்குள் தன்னை இழத்தல் என்னும் முறைக்கு பிரம்மம் இந்த திறமையை உபயோகப்படுத்துகிறது என்கிறார். அது எப்படி மரபில் இருந்து மாறுபடுகிறது என்பதையும் விளக்குகிறார்.

உதாரணமாக நாம் மரபில் மாயை என்பதை illusion -unreal - அப்படி ஒன்று இல்லை என்று நாம் நம்புவதில் ஆரம்பித்து, புரியாதவை, யதார்தத்திற்கு ஒத்துவராத விஷயங்கள் அனைத்தையுமே மாயை என்று நினைக்கிறோம். உதாரணமாக எனக்கு படிக்க முடியும் என்னும் நம்பிக்கை வரும் வரை ஏறத்தாழ இருபது ஆண்டுகள் படிப்பு என்பது ஒரு மாயையாகத்தான் இருந்தது. அதை இன்னும் புரிந்துக் கொள்ள நமக்கு புரியாததை நம்மில் இருந்து விலக்கிய இடங்கள், விலகிய இடங்கள், ஒத்து வராது என்று விட்ட இடங்கள் ஆகியவற்றை பார்த்தால், நாம் பலவற்றை பற்றியும் கொண்டுள்ள மாயையைப் பற்றிய அபிப்ராயம் புரியும். அதை கீழ் நிலை மாயை lower maya என்று எடுத்துக் கொள்ளலாம். அதாவது நாம் ஆனந்தம் என்று நினைப்ப வற்றுக்கு தடையாக இருப்பதையெல்லாம் கீழ் நிலை மாயை என்று எடுத்துக் கொள்ளலாம்.

பரம்பொருள், Life Divine ஞானம் போன்ற Life Divine -ன் நேரடி விளக்கங்கள் கொடுக்கும் கட்டுரைகளில்   மட்டும் தான் கர்மயோகி illusion என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். நடைமுறைப்படுத்த, மற்றும் Management  - Accomplishment கட்டுரைகளில்  அதை delusion -unshakable belief in something that is untrue  உண்மையில்லாத ஒன்றை உண்மை என்று நம்புவது என்னும் அறியாமை தான் மாயை என்று விளக்குகிறார். அதை ஒட்டியே இன்றைய பகிர்தலை அமைத்துக் கொண்டு இருக்கிறேன். நம் ஆனந்தத்திற்கு தடையாக இருப்பவற்றை விட்டு விலகுவதை கீழ் நிலை

மாயை என்று எடுத்துக் கொண்டால், அதுவே அதோடு ஒன்றி அல்லது ஆராய்ந்து அல்லது திருவுருமாறி, அதனால் முன்னேற்றம், ஆனந்தம் பெற்றால் அதை உயர்ந்த நிலை மாயை என்று எடுத்துக் கொள்ளலாம்.

அந்த நிலையில் நாம் சத்தியத்தை உணரும் போது, அல்லது பிரம்மத்தின் சட்டத்தை உணரும் போது அல்லது அப்படிப்பட்ட சட்டங்களின் நோக்கத்தை உணரும் போது நாம் அதிமனதை Supramental plane என்னும் சத்சித்தாந்தத்தின் extention -ஐ நீட்சியைத் தொடுகிறோம். அது ஆனந்தமான ஒரு இருப்பை நமக்குத் தருகிறது. அந்த ஆனந்தத்திலேயே நாம் திளைக்கும் போது நாமே அனந்தன் ஆகிறோம் என்று அத்தியாயத்தை சுருக்கமாக புரிந்துக் கொள்ளலாம்.

நடைமுறையில் உடல், உணர்வு, உணர்ச்சிகள் மூலம் நாம் பிற மனிதர்களை அவர்களின் செயல்களைப் பார்க்கும் போது நாம் அனைவரும் பிரிந்து இருப்பது போல தோன்றுகிறது. ஆனால் மனம் அதில் இருந்து வெளியே வந்து நாம் அறிந்த உயர்ந்த பண்புகள் மூலம் பார்க்கும் போது, எதிர்வினையாற்றாமல் இருப்பது, பிறர்நிலை பார்வை, correspondence என்று பார்க்கும் போது நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் ஒன்றுபட்டு இருக்கிறோம். எல்லோருள்ளும் நாம் இருக்கிறோம். அல்லது நம்முள் எல்லோரும் இருக்கிறார்கள் என்று ஒரு உயர்சித்ததின் பார்வையில் புரியும். அந்த ஒருமையை உணர்வதே இறைவன் விரும்பும் ஆனந்தம். அது துன்பத்தை, ஏமாற்றத்தை, வலியை, முரண்பாட்டை, வேறு பார்வையில் பார்த்தால் மட்டுமே வர முடியும்.

இன்னொரு உதாரணம் பழக்கத்தின் காரணமாக ஜடமாக, ஒரு வேலையைச் செய்யும் போது அதில் சக்தி, ஆற்றல் இருக்காது. ஆனால் செய்யும் ஆர்வத்தை சற்றே அதிகப் படுத்தும் போது அல்லது sincerity -ஐ அதிகப் படுத்தும் போது சுத்தம், ஒழுங்கு, நேர்த்தி, செம்மை, productivity , creativity என்று ஏராளமான உயர்ந்த விஷயங்கள் வெளிப்படுகிறது. அதற்கு ஏற்றார் போல நம் வேலை, பல வடிவங்களை, நிலைகளை பெறும். அதற்கு ஏற்ப பலன் வெளிப்படும். அதாவது நம் சித்தம் உயரும் போது நாம் புதிதாக படைக்கும் ஆற்றல் ஒன்று வருகிறது. அது உயர்நிலை மாயை. பழக்கத்தின் அடிப்படையில், விதியே என்று கடமையாகச் செய்வது கீழ் நிலை மாயை. அதாவது சித்த பூர்வமாக அதிமனதை, அதன் தளத்தை அதற்கான பண்புகளுடன் தொடும் போது, நம் சக்தியோடு வேறொரு சக்தி சேர்வதால், அதற்கான பலனும் அதன் மூலம் வரும் ஆனந்தமும் அதிகமாகிறது. காரணம் அது பிரம்மம் விரும்பும் ஆனந்தம். அதாவது நடைமுறையில் நாம் ஒரு

உருமாற்றத்தின் மூலமும், உயர்சித்தத்தின் மூலமும் அன்னை சிம்பலில் இருக்கும் பன்னிரண்டு பண்புகளை, அதன் வெவ்வேறு பரிமாணங்களை ஏதோ ஒரு வடிவில் பார்க்கும் போது அது பிரம்மத்தின் வெளிப்பாடு ஆகிறது. சுருக்கமாக சொல்வது என்றால் கீழ் நிலை மாயை நாம் ஏற்கனவே புரிந்துக் கொண்டுள்ள illusion -மாயை என்னும் அளவில் எடுத்துக் கொண்டு - உயர்ந்த மாயையை அந்த செயல், சூழல், வடிவங்கள், நிகழ்வுகள், பலன்கள் ஆகியவற்றிக்கு இடையே இருக்கும் தொடர்பு, அதன் காரணம், அதன் சட்டம், ஆகியவை புரிவது உயர்ந்த மாயையை புரிந்துக் கொள்வது.

அதையே வேறு வகையில் சொல்வதானால் ஒரு மனிதன், வடிவம், அதன் செயல்கள், அதன் பலன்கள் ஆகியவற்றிற்கு பின்னால் உள்ள உண்மையை, சத்தியத்தை நாம் புரிந்துக் கொள்ள முடியாத இடம் கீழ் நிலை மாயை. அதை வாழ்வில் துன்பம், வலி என்று உணர்கிறோம். ஆனால் அதன் பின்னால் உள்ள காரணம், உண்மை, சட்டம், புரிந்தால் அந்த வலி, துன்பம், முன்னேற்றத்தின் பாதை ஆகிறது. அது உயர்ந்த மாயை.

கீழ்நிலை மாயை என்பது அறியாமையின் மாயை. உயர்நிலை மாயை என்பது அறிவின் மாயை. இதை எல்லாம் புரிந்துக் கொள்ள வேண்டும் என்றால் நம் வாழ்வில் கீழ்கண்ட விஷயங்கள் நடந்து இருந்தால், அவற்றை இப்போது ஆராய்ந்தால் புரியும் என்கிறார் கர்மயோகி.

எடுத்த காரியத்தை ஏதோ ஒரு காரணத்திற்காக பாதியில் விடுதல், வாழ்வின் முரண்பாடுகளை, துன்பங்களை எந்தவித சிந்தனையும் இல்லாமல், விதி என்றோ அம்சம் என்றோ ஏற்று நடத்தல், தோற்றத்தை வைத்து, பேச்சை கொண்டு எடை போட்டு ஏமாந்த இடங்கள், அன்னை செய்ததை நாம் செய்ததாக நினைப்பது, ஆன்மா செய்ததை  மனம் செய்ததாக நினைப்பது, நாம் அறிவு என்று நினைத்து செய்தது அனைத்தும் தவறாக முடிந்த இடங்கள், ஆசையை ஆர்வம் என்று நினைக்கும் இடங்கள்,  நம்பி ஏமாந்த இடங்கள் , துரோகத்தை பலனை பெற்றதாக நினைக்கும்  இடங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்தால், இந்த இரண்டு நிலைக்கான வேறுபாடு புரியும். இதில் எது சரி என்று பட்டாலும், மாயை இல்லை என்று எடுத்துக் கொள்ளலாம். இல்லையென்றால் மாயை இருக்கிறது என்று பொருள். அப்படி எடுத்துக் கொள்ளும் போது தான் வலி, துன்பம் வருகிறது.  வாழ்வே ஒரு சாபமாகத் தோன்றுகிறது. அனைவரும் பேயாக தோன்றுகின்றனர். இதை பிரித்தறிய உதவுவது பகுத்தறிவு. அது கருத்துகளை இணைக்கும் அறிவு என்பதால் அது அகந்தை.  ஆனாலும் அது ஒரு உயர்ந்ததை காட்டுவதால், அது உயர் நிலை மாயை.  அதையும் பயன்படுத்த மறுத்தால் ஞானம் எழும், அதி மனதை ( super

mind)-ai தொட முடியும். பிரிந்து கிடக்கும் இவற்றை இணைக்கும் ஒரு ஆற்றல் தான் மாயை. மனிதர்களையும், செயல்களையும், அதி மனதையும் இணைக்க முடிந்த ஆற்றல் அது. மனதின் மாயை கீழ் நிலை மாயை. அது துன்பம், வலி, பிணக்கு, முரண்பாடு ஆகியவற்றை தன் பழைய அனுபவத்தின் அடிப்படையில் ஆராய்ந்து ஒன்றை முடிவு செய்கிறது. அது மாயையின் உயர் நிலையை மறுக்கிறது. அதில் இருந்து வெளியே வரும் தீர்வு, அங்கே தான் இருக்கிறது என்று அறிவது உயர் நிலை மாயை. மாயையின் மேல் நிலைக்கும், கீழ் நிலைக்கும் இருக்கும் வேறுபாடு ஒரு எண்ணம், நோக்கம், மனப்பான்மையில் இருக்கும் வேறுபாடு தான். அவை ஒரு பிரம்ம நோக்கத்தை புரிந்துக் கொண்டால் அதை ஞானம் என்கிறோம். அதாவது மாயை ஒளி பெற்றால் திருவுள்ளம் Thy Will பூர்த்தியாகும் என்கிறார். இது பரம்பொருளில் கர்மயோகி சொல்வதன் சுருக்கம்.

இதை நடைமுறையில் புரிந்துக் கொள்ள - யதார்த்தம் - லட்சியம் என்று பிரித்துப் பார்க்கலாம். நம் வாழ்வை, உலகை, அதன் செயல்களை நம் மனமே நடத்துவதாக நினைத்தால், அதன் பலன்களை அதுவே உற்பத்தி செய்வதாக நினைத்தால் அது யதார்த்தம். அது கீழ் நிலை மாயை. அதில் இன்பம், துன்பம் இரண்டும் உண்டு. லட்சியம் என்பது அவற்றின் பின்னால் உள்ள முழுமையை , அதன் சட்டங்களை, அதன் பின் உள்ள சத்தியத்தை அதன் பின் உள்ள இறைவனின் நோக்கத்தை மனதில் நிறுத்தி செய்வது உயர் நிலை மாயை. அதுவும் மாயை தான். என்றாலும் பரிணாமம், முன்னேற்றம் என்னும் அளவில் ஏதோ ஒரு பிரம்மத்தின் நோக்கத்தை ஏற்றுக் கொள்கிறோம்.

யதார்த்தம் கருத்தில் இருந்து எழுகிறது. லட்சியம் ஆன்மாவில் இருந்து எழுகிறது. ஆனால் மனமே அதன் கருவியாக இருக்கிறது. இரண்டுக்கும் உள்ள தொடர்பை பார்பபது Real Idea . ஒவ்வொரு விதைகுள்ளும் அது என்னவாக ஆக வேண்டும் என்று முழுதாக ஒரு Real Idea-வுடன் தான் படைக்கப்படுகிறது. மாம்பழ விதை ஆரஞ்சை தரமுடியாது என்பது போல நமக்கான real idea என்பது புரியாததால் தான் நாம் வலி, துன்பம் ஆகியவற்றை அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். நாம் யாராக இருக்க வேண்டும் என்று நாம் நினைப்பதற்கும் நாம் யாராக இருக்க வேண்டும் என்று இறைவன் நினைப்பதற்கும் இடையே நடக்கும் போராட்டம் தான் வாழ்க்கை என்னும் வரிகள் எனக்கு பிடித்தமான வரிகள். அந்த வித்தியாசத்தை புரிய வைப்பது மனப்பான்மை. மனப்பான்மை என்பது நம் மனம் போகும் போக்கு. அது வரையறைக்கு உட்பட்டது. முழுமையை, சத்தியத்தை நாம், அறிவின் மூலம் அனுபவம் மூலம் தேடுகிறோம். அதனால்

தடுமாற்றம் வருகிறது. குழப்பம் வருகிறது. நாம் அன்னை விரும்பும் பண்புகளை,  நாம் எடுத்துக் கொள்ளும் விதங்களை, பார்த்தாலே இது நன்றாக புரியும். சமர்ப்பணம் என்னும் பெயரில் நாம் அடையும் குழப்பங்கள் அதற்கு பெரிய உதாரணமாக இருக்கும். அதையே அன்னையைப் பற்றி புரிந்து அவரது அவதார நோக்கம் புரிந்து, அவர் ஏன் வந்தார், அவர் சக்தி எது, அவர் ஆற்றல் எப்படி செயல்படுகிறது, ஏன் செயல்படுகிறது என்பது புரிந்தால், இந்த குழப்பங்கள் வராது. கர்மயோகி சொல்வது போல there is no joy better than consecrated living  - என்று சொல்ல முடியும். அது உயர் நிலை மாயை.

அதனையும் தாண்டியது  அதிமனத்தளம், Supramental  plane. ஆனால் நாம் கீழ்நிலை மாயையில் இருப்பதால் நம் அனுபவம், அபிப்ராயம்,முன் முடிவுகள் மூலமே பார்ப்பதால், பக்தி, ஆன்மா, என்றெல்லாம் பேசினாலும் அதையும் நம் வரையறைக்குள் வைத்து பார்ப்பதால் நமக்குத் தெரிந்த விதத்தில் வரவில்லை என்றால் நமக்கு அது துன்பமாகத் தெரிகிறது.  பலன் கிடைத்தாலும் அதற்கான ஆனந்தத்தை நாம் அனுபவிக்க முடியவில்லை. என்னை எடுத்துக் கொண்டால், பெரிய விஷயங்களை விட்டு விடலாம்.  சிறு விஷயமாக பார்த்தால் கூட அப்படிதான் இருக்கிறது.  ஒரே லட்டை - உருண்டையாக கொடுத்தால் தான் பிடிக்கிறது . எப்படியும் உடைத்துதான் சாப்பிட போகிறேன் என்றாலும் உடைந்து இருந்தாலோ தூளாக இருந்தாலோ பிடிக்கவில்லை. அன்னை படமென்றால், சாந்தமாக பார்க்கும், சிரிக்கும் படங்களே பிடிக்கிறது.  பக்தி வருகிறது. மை போட்ட, make up போட்ட, கவுன் போட்ட, தலைப்பாகைகள் வைத்துக் கொண்டு இருக்கும் மதரைப் பார்த்தால் எனக்கு பிடிக்காது.  பக்தி வருவதில்லை. நம் அனுபவம், நம் கருத்து,  நம் அபிப்ராயங்கள் நம்மை வழி நடத்துவதால் வரும் பிரச்சினை இது. நம்மை வழி நடத்தும் சக்தி பற்றி நாம் அறியவில்லை. அறிந்தாலும் அதன் பின் நாம் செல்வதில்லை. அது கீழ் நிலை மாயை. அந்த மனம் மாறும் போது, கீழ்நிலையில் மனம் மாறும் போது, அபிப்ராயம், முன்முடிவுகள் ஆகியவற்றில் இருந்து வெளியே வரும் போது, நாம் நினைத்தது தவறு என்பது புரிகிறது. அது பகுதியான உண்மை. முழு உண்மை இல்லை என்றாலும் ஒரு சட்டம் புரிகிறது. நம் லாபத்திற்காக, முன்னேற்றத்திற்கான சட்டம் ஒன்று புரிகிறது. என்றாலும் அந்த சட்டம் உருவான இடம் நமக்கு புரிவதில்லை. அதை புரிந்துக் கொள்ளும் ஆற்றலைத் தருவது கீழ் நிலை மாயை. அதை ஆனந்தமாக மாற்றுவது மேல் நிலை மாயை.

சென்ற கூடலில் சமர்ப்பணன், தான் தமிழ் கற்ற அனுபவத்தைப் பற்றி சொன்னார். தமிழாசிரியர் அவரை அவமானப்படுத்தியதும் - அதனால் வந்த

வலி துன்பம் அவரை அதிகம் படிக்க வைத்து போட்டியில் வெற்றி பெற வைத்து அவரை ஆனந்தம் அடைய செய்தது. அடுத்தடுத்த கட்டத்திற்கு அவரை முன்னேற்றியது. அது உயர் நிலை மாயையை புரிந்துக் கொண்டு அவர் பயன்படுத்திய முறை.

இதே போல என்னை என் ஆங்கில ஆசிரியர் அவமானப்படுத்தினார். நானும் அவரை போல சபதம் செய்தேன் . அந்த ஆசிரியரின் நாற்காலியில் ஊசியை சொருகி வைத்தேன். அவர் உட்கார்ந்து கத்தியது எனக்கு ஆனந்தத்தை தந்தது. என் வகுப்பு சக மாணவர்களுக்கு ஹீரோ ஆனேன். அன்றிலிருந்து உருப்படாமல் போக ஆரம்பித்தேன். இரண்டு பேருமே ஆனந்தம் பெற்றதாக எடுத்துக் கொண்டாலும், அடுத்த கட்ட முன்னேற்றத்தை தருவதே ஆற்றலைக் கொண்ட மாயை. இதை போன்றே, யதார்த்தம், லட்சியம் என்று பலவற்றை பார்க்க முடியும். இன்னும் எளிதாக நேர்மறை பார்வை எதிர்மறை பார்வை என்று பிரித்து பார்த்து ஒரு உயர்ந்ததை அடைய முடியும். நம் பண்புகள் அனைத்தும் நம் மனப்பான்மையில் இருப்பதை உணர முடியும். சிறுது சிறிதாக கீழ் நிலை மாயையிலிருந்து உயர் நிலை மாயைக்கு செல்ல முடியும்.

அதே போல Ambition என்பதற்கும் Aspiration என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை பார்த்தால், Ambition -இல் எப்படியாவது அடைய வேண்டும் என்று vision மட்டுமே இருக்கும். அதுவும் அது போன்று இவற்றை பெற்ற நம் அனுபவங்கள் அல்லது பிறர் அனுபவத்தை ஒட்டி இருக்கும். ஆனால் aspiration -இல் அதை அடைய வேண்டிய முறை, அதற்கு தேவையான பண்புகள், அதனால் நாம் பெறப் போகும் ஆனந்தம் ஆகியவற்றை பற்றிய தெளிவு, நமக்கான தெளிவு, நமக்கு இருக்கும். பெரும்பாலும் அதில் நம் real idea ஒன்று இருக்கும். அதே போல தீவிரம் என்பதை intensity என்று குறிப்பிடும் கர்மயோகி அதை கீழ் நிலை மாயை என்கிறார். காரணம் அதில் நமக்கு தெரிந்ததை தீவிரமாக செய்துக் கொண்டு இருப்போம். ஆனால் அதன் உயர் நிலை அதி தீவிரம் அது sincerity என்கிறார். அதாவது அனைத்தையும் நாம் அறிந்த உயர்ந்த நிலையில் செய்வது.

அதாவது தாழ்ந்த சித்தத்தில் இருக்கும் போது நாம் செய்யும் செயல்கள் தாழ்ந்த மாயையாக இருக்கிறது.அதை அறியாமை என்று கூட கூறலாம். ஆனால் இங்கு அறியாமை என்பது ஒரு விஷயத்தை பற்றி தெரியாதது அல்ல. ஒரு முழுமையை புரிந்துக்கொள்ளாதது. பகுதியை மட்டும் பார்த்து அதன் மூலம் ஒரு முடிவுக்கு வருவது. அதுவே நம் துன்பங்களுக்கு காரணமாக இருக்கிறது. அதையே, உயர் சித்தத்தின் மூலம் பார்க்கும் போது, அதிமன

பண்புகள் மூலம் பார்க்கும் போது supramental perception . அதன் முழுமை புரிந்து வாழ்வில் வளமாக, முன்னேற்றமாக வந்து ஆனந்தத்தை தருகிறது. காரணம் அதனுள் ஒரு படைப்பாற்றல் மறைந்து இருப்பது தான்.

நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால் மாயை என்று நாம் இங்கு பேசுவது எல்லாம் திறனும், ஆற்றலும் கொண்ட ஒரு சக்தி. ப்ரம்மம் அதன் மனதின் நீட்சி மூலம் பரிணாமத்தில் முன்னேற உபயோகப்படுத்துகிறது என்பதை தான். அப்படி செய்யும் போது, அது பல வடிவங்கள், சூழல்கள், செயல்கள், பலன்கள் ஆகியவற்றை உருவாக்குகிறது. வேறொரு விதத்தில் சொல்வதானால் மாயை மனதின் பிரித்தறியும் சக்தியை முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்கிறது. அப்போது வருவதை Real idea என்றும் cosmic determinants என்றும் கூறுகிறோம். அதுவே நம் வாழ்வை நடத்துகிறது. அதுவே நம் ஆனந்தத்திற்கு காரணமாக இருக்கிறது. அதன் அடிப்படை கருத்து ஒருமை. குறைந்தபட்சம் நாம் உயர்ந்த மனதுடன், உயர்ந்த சித்ததுடன் ஆன்மாவின் பண்புகளுடன் ஒன்ற வேண்டும். அதி மனப்பார்வையான பிறர் நிலைப்பார்வை, correspondence போன்றவற்றின் மூலம் ஒன்ற வேண்டும். உயர்ந்த பரந்த மனதின் வழியே பார்க்கும் போது நமக்கு அந்த ஒருமை புரியும். அது வளர்ந்து பிரம்மத்தோடு ஒன்ற வேண்டும். நாமே பிரம்மம் என்பது புரிய வேண்டும். எல்லாவற்றையும் பிரம்மத்தின் பார்வையில், ஒருமையின் பார்வையில் பார்க்க வேண்டும் என்பது தான் பரிணாம முன்னேற்றத்திற்கான வழி, செயல் முறை. path and process. அப்படி இல்லாமல் சித்தத்தின் கீழ்நிலைகளில் மனதின் உணர்ச்சிகள், உடலின் உணர்வுகள் ஆகியவற்றை வைத்து ஒன்றை பார்க்கும் போது பிரிவினை, சுயநலம் போன்றவற்றின் மூலம் பார்ப்பதால், நம் எதிர்பார்ப்பு, அது தொடர்பான இழப்பு, நமக்கு வலி, துன்பமாகத் தெரிகிறது. நாம் விரும்பும் மகிழ்ச்சியை விட்டு விலகிப் போகிறோம் என்னும் பயத்தில் மேலும் மேலும் சுயநலத்தை ஒட்டி சிந்திக்கிறோம். அது மேலும் அடைந்தே ஆக வேண்டும் என்னும் பிடிவாதத்திற்கு, பிரிவினைக்கு, அறியாமைக்கு தள்ளுகிறது. துன்பம் நிரந்தரமாகிறது.

முதல் ஒன்றிரண்டு அத்தியாயங்களில் சொன்னது போல நான் என் கம்பெனியையே இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்கிறேன். எனக்கு ஆனந்தத்தை அடைய ஏராளமான வழிகள் இருக்கின்றன. அதை சத் என்று எடுத்துக் கொள்ளலாம். அதிலிருந்து ஒன்றை தேர்ந்து எடுத்து, இதன் மூலம் அதிக ஆனந்தம் பெறலாம் என்று நினைக்கிறேன். அது சித். அதை அடைவதற்கான சட்டங்கள், வழிகள், நோக்கங்கள், vision and mission -ஐ உருவாக்குகிறேன். ஆனந்தம் என்பது என்ன தான் என் கருத்து என்றாலும்,

அது வெளிப்படும் விதம் என் நோக்கம், வழிகள், சட்டம் என்னும் வரையறைக்கு உட்பட்டது. நான் குறுகியதாக அதை வைத்துக் கொள்ளும் அளவிற்கே அது பலிக்கும். உதாரணமாக 10 கோடி turn over target வைத்த போது இதே field -இல் 400 கோடி turn over company-யும் இருந்தது. உயர்ந்ததை நினைக்க வேண்டும் என்று சொல்லும் நான் அதை பற்றி நினைக்க கூட இல்லை. காரணம் என் potential , என் நிலை, என் தளம், என் திறமை, போன்றவற்றை பற்றி எனக்கு தெரியாததால், புரியாததால், அந்த வரையறையை நானே ஏற்படுத்திக் கொள்கிறேன். அது மாயையாக படுகிறது. அதை கீழ் நிலை மாயை என்று எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் சில இடங்கள் Token act செய்யும் இடங்கள் என் நிலை, தளம், திறமை, திறன் போன்றவற்றை தாண்டிய நிலைகளை, உயர்சித்ததுடன், பலனைப் பற்றிய நினைவு, பற்று, எதிர்பார்ப்பு இல்லாமல் எடுத்துக் கொள்கிறேன். அதாவது அதுவும் எனக்குத் தெரியும். ஆனால் அந்த நிலையை எப்போதும் பின்பற்றுவதில்லை. அது உயர்ந்த நிலை மாயை.

இரண்டு நிலைகளிலுமே ஆனந்தத்திற்கான நான் வகுத்த சட்டங்கள் அடிப்படையாக அமைந்து அதற்கான ஆற்றலை, திசையைத் தருகிறது. Energy and direction. அதாவது நான் ஏதோ ஒரு ஆனந்தத்தை தேடி என் கம்பெனியை படைக்கிறேன். அது பிரம்மம் என்றால், அதன் உண்மையான admin இந்த மாயைகள் தான். என் எண்ணத்தை இதன் அடிப்படையிலேயே நிறைவேற்ற முடியும். அது ஆனந்தத்திற்கானது என்றால் அது தெய்வீக மாயை ஆகிறது. Real Idea manufacturing Ananda through the power of Divine Maya. அதையே வேறு ஒரு பார்வையில் பார்த்தால், என் கம்பெனியை நான் உருவாக்கினேன் என்று கூறுகிறேன். சத்-இல் இருந்து சித்தத்தின் மூலம் - ஒரு ஆனந்தத்திற்காக உருவாக்கினேன் என்று கூறுகிறேன். ஆனால் உண்மையில் நான் வெளிப்படுத்தியது என்னுடைய ஒரு சிந்தனையை, ஒரு கருத்தை. இன்னும் ஆழமாக பார்த்தால் என் அக உணர்வையே நான் வெளிப்படுத்தி இருக்கிறேன். அதாவது நானும் என் கம்பெனியும் வேறு வேறு அல்ல. எனக்குள் உள்ள ஒன்று தான் வெளிப்படுகிறது. அதனால் வெளிப்படும் அனைத்திலும் என் சித்தம் இருக்கும். என் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல பல வடிவங்கள், office -களாக, factory -களாக , Manager , Supervisor , Labour என்று பல வடிவங்கள், பல நிகழ்வுகள், செயல்களை உருவாக்குகிறேன். அவையெல்லாம் வேறு வேறு போல தோன்றினாலும் அவற்றிலும் என் சித்தமே இருக்கிறது. அவைகள், அவர்கள் அதை அறிந்து அதே கவனம், சித்தத்துடன் செய்தால் ஒரு சுமுகமான ஆனந்தத்தை பெற முடியும். அப்படி இல்லாமல், தான் இந்த company -யின் பாகம் என்பதை உணராமல் வேறு ஒரு

பாதையில், நோக்கில், செல்லும் போது அது சுமுகக்குறைவாக மாறுகிறது. பாகங்களுக்கு இடையேயான தொடர்பில் தடுமாற்றத்தை ஏற்படுத்துகிறது. இவையெல்லாம் ஒரு கம்பெனியில் நடக்கும்தான் என்று எடுத்துக் கொண்டால் அது யதார்த்தம். முழுமை புரியாததால் நாம் ஏற்றுக் கொண்ட மாயை. அதையே conscious -ஆக என் சித்தம் ஏன் அவனிடம் செல்லுபடியாகவில்லை என்று பார்த்தால் முரண்பாட்டுக்கான காரணம் புரியும். அதை களையும் போது கம்பெனி செல்ல வேண்டிய வழியில் செல்கிறது. அதாவது என் கம்பெனியில் உள்ள அனைத்து பொருள், மனிதர்கள் உள்ளும் இருப்பது நானே. எல்லோரும் என்னுள் அந்த அறியாமையின் மூலம் இருக்கிறார்கள். நான் நினைக்கும் ஆனந்தத்தை பெற நான் உருவாக்கிய வடிவங்கள் அவை. நான் உருவாக்கிய designations-பதவிகள் அவை. என் சித்தம் என் செம்மை சரியாக இருக்கும் போது எனக்கு மட்டுமல்ல, அவர்களுக்கும் அது புரியும். அப்படி இல்லையென்றால் என் வழி, சட்டம், நான் ஏன் இப்படி செய்கிறேன் அல்லது நான் ஏன் இப்படி செய்யவில்லை என்பது போன்றவை புரியவில்லை என்றால் அது என் அறியாமையாகத் தான் உணரப்படும். உதாரணமாக, லஞ்சம் தராதது, மற்றும் பல பண்புகளை நான் பின்பற்ற சொல்லும் போது என் auditor மற்றும் வக்கீலும் என்னை பைத்தியக்காரன், உலகம் தெரியாதவன் என்றே நினைப்பர். சில நேரங்களில், ஏன் பல நேரங்களில் அதனால நான் படும் கஷ்டம், அதனால் எனக்கு ஏற்படும் இழப்பு ஆகியவற்றை பார்த்து அதை எனக்கு, வலி, துன்பம் என்று நினைப்பார்கள். உண்மையில் அந்த வலி கர்மயோகியின் vibration -க்கான ஆனந்தம் என்பது எனக்கு மட்டுமே தெரியும். என் ஆன்மா மட்டுமே அதை உணர முடியும். இது நான் விரும்பிய ஆனந்தம். இதே ஆனந்தம் எல்லோருக்கும் வருமா என்று சொல்ல முடியாது. அப்படி பார்க்கும் போது, நம்மைப் படைத்ததாக நாம் நினைக்கும் பிரம்மமும், நாமும் வேறு வேறாக இருக்க முடியாது. அதாவது நாம் உட்பட அனைத்தும் பிரம்மமே. அல்லது பிரம்மத்தின் சுய வெளிப்பாடே.

அதே போல சென்னையில் வந்த வெள்ளம் ஒரு மாயை. என்ன வாழ்க்கை இது என்பதில் ஆரம்பித்து எனக்கு மட்டுமல்ல, சென்னையில் 50% பாதிக்கப்பட்டதால் தென் சென்னை வியாபாரிகள், தொழிலதிபர்கள் பெரும்பாலோர் விரக்தி அடைந்து இருந்தனர். Stock Insurance முதற்கொண்டு. வாகனம், மெஷினரி என்று எதற்கான பாதுகாப்பும் முதலீடும், திட்டமிடலும் பெரும்பாலோருக்கு கை கொடுக்கவில்லை. அது கீழ் நிலை மாயை என்று புரியாமல் இருந்தாலும் அதிலேயே மூழ்கி விட முடியாது என்று எல்லாரும் வெளியே வர நினைத்த போது, உயர் நிலை மாயை தத்துவப் படி, ஒருவரது

வளர்ச்சி, அனைவரது வளர்ச்சி, அனைவரது வளர்ச்சி ஒருவரை வளர்க்கும் என்னும் தத்துவப்படி, அது வரை இருந்த தாழ்ந்த சித்தங்களான போட்டி, பொறாமை, சுயநலம், தரத்தில் ஏமாற்றுவது என்பதை விட்டு அம்பத்தூர் எஸ்டேட் மீண்டு வர வேண்டும், கிண்டி எஸ்டேட் மீண்டு வர வேண்டும், திருமழிசை எஸ்டேட் மீண்டு வர வேண்டும் என்று சற்றே உயர்சித்ததில் நின்று வேறு வழியில்லாமல் செய்தனர். எல்லாரும் நன்றாக இருப்போம் என்ற நிலையை அந்த association meeting-இல் தான் முதன் முதலில் உணர்ந்தேன். அதன் பிறகு அங்கு வந்த சுமுகம், technology பரிமாற்றம், தலைமுறை தலைமுறையாக ஏதோ பழைய technology , அழுக்கான சூழல் என்பது மாறி பெரும்பாலோர் latest technology -க்கு வந்தனர், முன்பை விட ஒரு good will , தரம், அதாவது truth, விவேகம், பாகுபாடு போன்றவை அதிகம் உச்சபட்சத்தில் வெளிப்பட்டது/ Divine Maya creates multiplicity for progress என்பதை நான் கண் கூடாக பார்த்தேன். இன்று அது நடந்து ஏறத்தாழ 7 வருடங்கள் ஆகிறது. முன்பு இருந்த cut throat competition போட்டி, பொறாமையை, மற்றவர் முன்னேற்றத்தை தடுப்பது. புறம் சொல்வது போன்றவை வெகுவாக குறைந்ததை நான் பார்க்கிறேன். Transformation and progress are the essential method of Maya என்பதற்கு நம்மை, நம்மை சுற்றி நடப்பவைகளை கவனித்துப் பார்த்தாலே நன்றாக புரிந்துக் கொள்ள முடியும். அனைத்தும் ஏதோ ஒரு சட்டப்படி, திட்டப்படி இயங்கி கொண்டிருப்பது தெரியும். நாம் வாழ்வே மாயம் என்று நினைக்கும் இடங்கள் எல்லாம், அடுத்த நிலைக்கான அழைப்பு - மனதில் இருந்து வெளியேறி ஆன்மாவை நாட தேவையான அழைப்பு என்று புரிந்தால் - நம் வலி, துன்பம், ஏமாற்றம் எல்லாமே ஆனந்தமாகத் தெரியும்.

இந்த பிரபஞ்சத்தை தனது ஆனந்தத்திற்காக பிரம்மம் படைத்தது. அந்த ஆனந்தத்தின் வெளிப்பாடு தான் நாமும் நம் வாழ்வும். நம் இருப்பு, இயல்பு, மனப்பான்மை, அதற்கான அபிப்ராயங்கள் அதன் பின்னால் உள்ள அனுபவங்கள், அதற்கு பின்னால் உள்ள செயல்கள், அவற்றின் மூலம் வரும் பலன்கள் , அவற்றின் வெளிப்பாடுகள், அவை வெளிப்படும் விதம் என்று எல்லாமே அந்த பிரம்மத்தின் ஆனந்தத்திற்குத் தான் என்று சென்ற இரண்டு அத்தியாயங்களில் பிரச்சினையும் அதற்கான தீர்வும் என்று பார்த்தோம்.

அதன் மூலம் நம் துன்பம், வலி போன்றவற்றுக்கான காரணங்களை முழுமையாக புரிந்துக் கொள்ளவில்லை என்றால் கூட பிரச்சனைகள் ஏன் வருகிறது, நாம் அதற்கு எப்படி காரணமானோம், அதற்கு தீர்வு என்ன என்னும் அளவிற்காவது புரிந்துக் கொண்டிருப்போம். அது கீழ் நிலை மாயை என்னும் இடம்- என்று எடுத்துக் கொண்டால், அதன் திரையை கிழித்து -

செயல்படுத்தும் இடத்திற்கு செல்வது மனதின் உயர்ந்த நிலைகளில் இருந்து செயல்படுகிறது.

காரணம் அனைத்தும் பிரம்மத்தின் சுய வெளிப்பாடே. உதாரணமாக ஒரு விதை இருக்கிறது. அது என்னவாக ஆக வேண்டும் என்ற நோக்கமும் அதற்காக அது செய்ய வேண்டியதையும் அதனுள் வித்தாக இருக்கிறது. மாம்பழ விதை ஆரஞ்சாக மாற முடியாது என்று கூறினேன். அதே போல ஒரு மாம்பழ விதை மண்ணை எதிர்த்தும் அதை ஊடுருவி செல்லும் பிரச்சினைக்கு எதிர்ப்புக்கு ஆழத்திற்கு பயந்தால் அது மேலே வளர முடியாது. மாங்கனி தரமுடியாது. அது- அது அடையும் ஆனந்தத்தை தடுப்பது மட்டுமல்ல - அதனால் பிறர் பெற இருக்கும் ஆனந்தத்தையும் தடுக்கிறது.

நம் வித்து எங்கே இருக்கிறது என்பதை வாழ்வுக்காட்டும். Life Repeats என்னும் இடங்கள் நம் வித்தை காட்டும் இடங்கள், அதை முதல் முறையிலேயே புரிந்துக் கொண்டால், அது பிரச்சினை அதிகம் இல்லாத நேரடி ஆனந்தமாக இருக்கும். இல்லையென்றால் அடிபட்டு மிதிபட்டு வேறு வழியில்லாமல் செய்தே ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். நாம் முடியாது என்று பயந்து ஒதுங்கும் இடம், தவிர்க்கும் இடங்களும் அப்படிப்பட்ட ஆனந்தம் உள்ள இடங்களே. இவற்றை எல்லாம் மாயை என்று நினைத்து விட்டு விடுகிறோம். அங்கே இருக்கும் வித்தை நாம் கவனிப்பதில்லை.

உதாரணமாக படிக்கும் காலத்தில் படிக்கும் அளவிற்கு அறிவே இல்லாதவன் அல்ல நான். என்றாலும் என் கவனம் வேறு விஷயங்களில் இருந்தது. படிப்பு முக்கியம் என்று சொல்லும் எவரையும் எனக்குப் பிடிக்கவில்லை. நான் வேலை செய்த இடங்களில் எல்லாம் நல்ல திறமை இருக்கிறது, உடனே பிடித்துக் கொள்கிறாய். உனக்கு ஒரு degree இருந்தால் நன்றாக இருப்பாய் என்னும் போதும் பிடிக்கவில்லை. 35 வயதில் வேறு வழி இல்லாத போது ஒரு degree இருந்தால் தான் நான் மனிதனான இருக்க முடியும் என்று வாழ்வு அழுத்தத்தை தந்த போதே என்னால் படிக்க முடிந்தது. என்னால் படிக்க முடியாது, அந்த அளவிற்கு எனக்கு அறிவில்லை, அம்சம் இல்லை, இதுதான் என் விதி என்று நான் இருந்த அறியாமை எனக்கு புரிந்தது. அதே போல ABCD தவிர ஆங்கிலத்தில் வேறு எதுவும் தெரியாது என்னும் நிலையில் வேறு வழி இல்லாமல் கர்மயோகி சொன்ன முறைப்படி படித்த போது ஒரே வருடத்தில் ஆங்கில ஆசிரியரான அவரே பாராட்டுமளவிற்கு vocubalary தெரிந்தது. அதற்கான வித்தில்லாமல் அது வராது என்றார். அது உண்மையே. இன்று

ஹிந்தி எனக்கு அவசியம் தேவைப்படுகிறது. கிட்டத்தட்ட இரண்டு வருடமாக முயன்றுக் கொண்டு இருக்கிறேன். நான்கு வார்த்தைகள் கூட வரவில்லை.

அதே போல என் அனுபவங்களை - அன்னை என் வாழ்வில் பலித்த விதத்தை மலர்ந்த ஜீவியத்தில் அன்பர் அனுபவமாக சொல்லாமல் கதைகளாக சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். உடனடியாக பத்து கதைகள் எழுதினேன். அதில் சில கதைகள் சிறுகதை இலக்கணத்திற்கு பொருந்தி வந்தது என்னும் அளவிற்கு இருந்தது. ஆனால் இன்று பள்ளிகளை நடத்தும் ஒரு அன்பர் மனித சுபாவ கருத்துக்களை சிறு கதைகளாக குழந்தைகளுக்காக எழுதுங்கள் என்கிறார். ஒரு பக்கம் கூட எழுத வரவில்லை.

2003-இல் நான் அன்னையிடம் வந்ததிலிருந்து Life Divine படி என்று எனக்கு சொல்லப்படுகிறது. ஆனால் அது எனக்கு வராது, புரியாது என்றே இருந்தேன். கர்மயோகி சொல்லிக் கூட நான் படிக்கவில்லை. அவரிடமே எனக்கு அதெல்லாம் சரி வராது என்றே கூறியிருக்கிறேன். ஆனால் அவர் மறைந்த பிறகு வாழ்வை பற்றிக் கூற யாரும் இல்லை என்னும் வெற்றிடம் வந்த போது வேறு வழியில்லாமல் 2020 May 1st -லிருந்து தான் Life Divine -ஐயும் Synthesis of Yoga -வையும் படிக்க ஆரம்பித்தேன். அது இந்த கூடலில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. இப்படி நம் வாழ்வில் ஒரு பிரதான எண்ணம் (Idea with intensity) ஒன்று இருக்கும். நம் பலம் என்று ஒன்று இருக்கும். அங்கு தான் நம் வித்து இருக்கிறது என்பது புரிய வேண்டும்.

இது போன்று நாம் தயங்கும், தவிர்க்கும், துன்பப்படும் இடங்களை, அவை தர இருக்கும் ஆனந்தத்தை நமக்கு புரியவில்லை என்பதால் மாயை, எட்டாக் கனி,  நமக்கு கிடையாது என்று இருக்கிறோம். அங்கு தான் ஆனந்தத்திற்கான ஆற்றல் இருக்கிறது என்று புரிவது - அதை தெய்வீக மாயை ஆக்கும். அதை புரிந்துகொள்வது அதற்கான விழிப்புணர்வு வருவது கீழ்நிலை மாயை. அதை செயல்படுத்துவது உயர்நிலை மாயை.

அதாவது தான் பிரம்மம் என்று அறிந்த ஏதோ ஒரு அம்சம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு செயலிலும் தன்னை எப்படி வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் தெளிவான திட்டத்துடன், ஒரு உறுதியுடன்  இருக்கிறது.  அதை பார்க்காமல் பிரம்மத்தை நாம் உருவாக்குவதில் இருந்து வேறாகப் பார்க்கிறோம். அதனால் அனைத்தையும் நாம் செய்வதாக நினைக்கிறோம். ஆனால் நாம் உருவாக்குவது நம்மில் ஒரு பகுதியே, பிரம்மத்தின் அம்சமாக நாம் உருவாக்குவதில் அந்த அம்சமும் பரவி விடுகிறது அது வெளிப்பட

துடிக்கிறது என்பதை நாம் கவனிப்பதில்லை. ஆழ்ந்த அறிவோடு எதையும் யோசித்து திட்டமிட்டு செய்வதாக நினைத்து தான் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் பலவற்றையும் செய்தேன். சாதித்து விட்டதாக நினைத்தும் இருக்கிறேன். ஆனால் நன்றாக யோசித்துப் பார்த்தால் இது வரை நான் செய்தேன், நான் உருவாக்கினேன் என்று நினைத்தவற்றை இன்று பார்த்தால், ஒன்று கூட நான் நினைத்தபடி வரவில்லை, நடக்கவில்லை, பலனைத் தரவில்லை என்பது புரிகிறது.

அது நான் இல்லையென்றால் அது வேறு யாராக இருக்க முடியும், அப்படியென்றால் அவற்றை எல்லாம் யார் நடத்தினார்கள் என்னும் கேள்வி எழுகிறது. தானே உருவாக்கி தானே நடத்தி, தானே ஆனந்தப்படும் ஒன்றாகத்தான் அது இருக்க முடியும். காரணம் மனதின் மூலம், பிரிவினை மூலம், மட்டுமே ஆனந்தத்தை பிரித்தறிய தனி மனிதன் முயல்வதால், அவனால் இந்த மூன்றுமாக ஒரே நேரத்தில் இருக்க முடியாது. சத் சித் ஆனந்தம் என்னும் மூன்றும் வெளிப்படும் பேரானந்தம் அவனிடம் வெளிப்பட வேண்டுமென்றால், தான் பிரம்மம் என்னும் உணர்வு, ஞானம் அவனுக்கு வர வேண்டும். அதாவது தன் இருப்பை, existence -ஐ உணர வேண்டும். தன் சித்தத்தை பற்றி சித்த பூர்வமாக உணர வேண்டும். அப்போது பிரம்மம் விரும்பிய ஆனந்தம் அவனுக்கு துன்பம், வலி, என்று நினைப்பவற்றிலும் வரும். அதை உணர முடியாமல், அல்லது அந்த நிலையை அடைய முடியாமல் இருக்கும் அவன் நிலை ஒரு திரை போல எடுத்துக் கொள்ளலாம். அந்த திரைக்கு இந்த பக்கம் இருக்கும் போது, வாழ்வு, வலி, துன்பம், குழப்பம், ஏமாற்றம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டதாக தெரிகிறது. அது ஏன் என்று புரியாததால் அதை மாயை என்றான். அது கீழ்நிலை மாயை. இப்போது இது பற்றி தெரிந்த பிறகு அதில் இருந்து நாம் வெளியே வர எடுக்கும் முயற்சியில் நம் அபிப்ராயம், நம் சிந்தனை, நம் மனம், நம் அனுபவம் ஆகியவற்றை ஒட்டி இல்லாமல் அதைத் தாண்டிய ஒன்றின், பிரம்மத்தின், அதன் நோக்கத்தின் பார்வையில் சிந்திக்கும் போது நம் ஆனந்தத்திற்கான வழி ஒன்று தென்படுகிறது. அது உயர் நிலை மாயை. அதை உணர முடியாத அறியாமை கீழ் நிலை மாயை. அந்த நிலைக்கும் பிரம்மமே தன்னை உட்படுத்திக் கொள்கிறது. ஜடப் பொருளாகவும், பின் மற்ற தாவர, விலங்கு உயிரினங்களாகவும், பின் மனிதனின் ஜடம், உணர்வு, மனம் என்று தான் சுருக்கி கொண்டதில் இருந்து வெளியே வருகிறது. அதாவது மனதை வைத்து அதன் பிரிவினை சிந்தனைகளில் இருந்து வெளியே வரும் நிலைக்கு வருகிறது. அது வரை உயர்நிலை மாயை. பின் மனதை விட்டும் வெளியே

வந்து உள்ளுறை ஞானம் , நேரடி ஞானம் என்று சித்தத்தில் முன்னேற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

நடைமுறையில் முதலில் மனிதன் பிரம்மம் என்ற ஒன்றை உணர ஆரம்பிக்கிறான். பின் தானே அது என்று புரிந்துக் கொள்ள ஆரம்பிக்கிறான். அதன் மூலம் அவன் ஆதியில், மூலத்தில் அனுபவிக்க விரும்பிய ஆனந்தத்தை வெளிக் கொண்டு வருகிறான். அது நானே எல்லாம் என்பதில் இருந்து எல்லோருக்குள்ளும் நான் இருக்கிறேன், எல்லோரும் என்னுள் இருக்கிறார்கள் என்னும் ஞானத்தை முழுமை அடைய வைக்கிறது. இது தான் ஆனந்தத்திற்கான நாம் புதிர் என்று நினைக்கும் பலவற்றிற்கு சாவி என்கிறார் பகவான். This triple movement is the key of the world enigma என்று குறிப்பிடுகிறார். கர்மயோகி எழுதியதால் இது நமக்கு புரிவது போல இருக்கிறது. இருந்தாலும் இதை வெளிப்படுத்தும் முறை நமக்கு இன்னமும் புரியவில்லை. சாவி பற்றி புரிகிறது என்றாலும் அது நம் கையில் தான் இருக்கிறது என்று புரிந்தாலும், அது எந்த பூட்டுக்கான சாவி என்பதில் பெரிய குழப்பம் இருக்கிறது. அது புரிய வேண்டும் என்றால் வாழ்வில் நடக்கும் எதுவும் தன்னிஷ்டத்திற்கு வெளிப்பட்டதில்லை. அது ஒரு நோக்கத்திற்கு உட்பட்டே வெளிப்படுகிறது. பரிணாமத்தில், சித்தத்தில், வாழ்வில், முன்னேற, மனதை தாண்ட ஒரு சட்டத்தை ஏற்படுத்தி அதற்கு உட்பட்டே வெளிப்படுத்துகிறது. மனதை அதன் வழிகளை தாண்டுவது ஓரளவு அதை புரிய வைக்கும். நம் அறியாமை என்று நினைப்பதெல்லாம், நம் துன்பம், வலி ஆகியவற்றுக்கு காரணமாக நினைப்பதெல்லாம், நம் அறிவு, அறியாமையில் மறைவதால் தான். அதனால் தான் நாம் அறிந்த உயர்ந்த மனப்பான்மை, மனநிலை, செயல்கள் ஆகியவற்றில் நின்று கூட நம்மால் எதையும் செய்ய முடிவதில்லை.

நம் மனம் என்பது அகந்தையின், சிருஷ்டியின் ஒரு சக்தி. அதன் நோக்கம் சுயநலம். அதன் மூலமே அது வாழ்வை நடத்தும் சக்தியைப் பெறுகிறது. நம்மால் அந்த சக்தியை மாற்ற முடியாது. ஆனால் அதே மனது சக்தி பெறும் திசையை மாற்ற முடியும். அகந்தையின் சக்திக்கு பதிலாக ஆன்மாவின் சக்தியை பெற அதை மாற்ற முடியும். இதுவும் ஒரு வகையில் சுயநலம் தான் என்றாலும் என்னை பொறுத்தவரை பகுதியில் இருந்து, அகந்தையில் இருந்து வெளியே வரும் நோக்கமாக உயர் நிலை நோக்கமாக மாறுவதால், கீழ் நிலை நோக்கங்களை விட இது மேலானது என்பது என் கருத்து.

நம் மனதின் நிலைகளில் இருந்து நாம் வெளியே வரும் நிலைக்கு ஏற்ப, மனப்பான்மை மாறுவதற்கு ஏற்ப, அது நம் வாழ்வில் பலன் தருவதைக்

காணலாம்.  வாழ்வில் ஆனந்தம் ஒளிந்திருக்கிறது என்று பகவான் சொல்வதன் பொருள் அப்போது புரியும். நடைமுறையில் நாம் அந்த சாவியை உபயோகப்படுத்தும் அளவிற்கு ஜடத்தில் வளம், prosperity திறக்கிறது. உணர்வுக்கு திறந்தால் அது புகழாக வருகிறது. மனதில் திறந்தால்  ஞானமாக வருகிறது. அதை ஆன்மாவே உணர்ந்து செய்யும் போது நாமே அருளை உற்பத்தி செய்ய முடிகிறது. அந்ததந்த நிலைக்கான ஆனந்தத்தை வாழ்வில் நிச்சயம் நம்மால் பார்க்க முடியும். அது புரியும் போது எந்த பூட்டிற்கு எந்த சாவி என்பது புரியும்.

ஒவ்வொரு விஷயத்திலும், செயலிலும் ஒவ்வொரு நொடியும் ஒரு முழுமையை நோக்கி, ஒரு செம்மையை நோக்கி, பல நிலைகளுக்கான பரிமாணங்களை, அடைய வேண்டிய உயர் சித்தங்களை  புரிய வைக்க நடந்துக் கொண்டு இருப்பது புரியும். உதாரணமாக வியாபாரத்தில் பல நேரங்களில் வர வேண்டிய பணம் மிக தாமதமாகும்.  ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு பண்பை எடுத்துக் கொள்ள வேண்டி வரும். சில நேரங்களில் அதை விற்ற நிகழ்வு பற்றி கடந்த கால சமர்ப்பணம் அதை உடனே கொண்டு வரும். சில நேரங்கள் நன்றாக ஆழ்ந்து அங்கு நாம் மனப்பான்மையில் செய்த தவறை கவனித்து மாற விரும்பும் போது பணம் திரும்ப வரும். சில நேரங்களில் நாம் பாக்கி வைத்து இருப்பதை கொடுக்கும் போது வரும்.  சில நேரங்களில் வக்கீல் நோட்டீஸ் விடும் போது தான் வரும். இது போல பல நிலைகள் - ஜடத்தில் - physical execution -இல் செய்த தவறு, உணர்வு, உணர்ச்சியில் செய்த தவறு, மனப்பான்மை நோக்கத்தில் செய்த தவறு என்று நம் தளத்திற்கு ஏற்றாற்போல நம் மனமாற்றம், சட்டம், புரிதல் போன்றவற்றிக்கு ஏற்றார் போல நிச்சயம் நடக்கிறது.

ஒரு முறை எல்லாம் செய்து பார்த்தும் ஒருவரிடமிருந்து பணம் வரவில்லை. கர்மயோகிக்கு அதை பற்றி விரிவாக எழுதி கேட்டேன். அவர் இந்த சந்தர்ப்பத்தில் உன் சுபாவத்தின்  படி போ. இன்று பணம் வரவில்லை என்றால் நடப்பதே வேறு என்று மிரட்டு என்றார்.  ஆனால் ஒரு condition . உன் மிரட்டல் சுபாவத்திற்காக அகந்தை வழி செல்வதற்காக சந்தோஷப்படாமல், இது எனக்கு வர வேண்டிய பணம் அதனால் கேட்கிறேன் என்ற நம்பிக்கையில் மட்டும் கேட்க முடியும் வரை உன் வசூலிக்க தோன்றும் முறைகளை சமர்ப்பணம் செய் என்றார். எனக்கு பிடித்த விஷயத்தை செய்ய சொல்லிவிட்டு கையை கட்டிப் போட்டது போல இருந்தது. அவனை பிடித்து மிதிக்க வேண்டும் என்ற முழு எனெர்ஜியுடன் இருந்தேன். என்றாலும் அந்த உற்சாகத்தை, வழிகளை , எனெர்ஜியை சமர்ப்பணம் செய்த படி இருந்தேன். கர்மயோகி சொன்னதாக எனக்கு இந்த செய்தி காலை 7 மணிக்கு

சொல்லப்பட்டது. மனம் அடங்க மதியம் 2 மணி ஆனது.  ஓரளவு அவர் சொன்ன மனநிலை வந்ததாக நினைத்து, பணம் தரவேண்டியவருக்கு phone செய்ய phone எடுத்தேன். அந்த நேரம் SMS வந்தது. அந்த பணம் credit ஆகி இருந்தது. இது போல ஒவ்வொன்றிலும் நடக்கிறது. நாம் கவனிப்பதில்லை. அதற்கு ஒரு கருவி faculty தேவைப்படுகிறது. கீழ்நிலை மாயை மற்றும் மேல் நிலை மாயை பற்றி புரிந்து அந்த திரையை நோக்கும் மனம் தான், கவனமான சித்தம் தான் அந்த கருவி.

பரிணாமத்தில் வளர, எடுத்தவுடன் வரையற்ற ஒன்றின் அதன் சட்டங்களை எடுத்துக் கொள்ள முடியாது என்பதால் நமக்கு புரிந்து நம் மனத்துக்குத் தெரிந்த வரையறையுடன் கூடிய ஒரு உயர் சித்தத்தை எடுத்துக் கொண்டு செயல் படவைக்கும் ஒரு faculty தான் மாயை. அது புரியாத போது அது மாயையாக இருக்கிறது. அது ஏன் மாயையாக இருக்கிறது என்று ஆராயும் போது அது தெய்வீக மாயை என்பது புரிகிறது. அது ஆனந்தத்திற்கான ஒரு ஆற்றல் என்பது புரிகிறது. பிரம்மம் வெளிப்படுத்த விரும்பும் ஒரு உண்மைக்கு, சத்தியத்திற்கு, அதன் அசல் கருத்துக்கு ஒரு வடிவம் கொடுப்பது மாயை. வேறு ஒரு faculty தேவை என்று சொல்லும் போதே நாம் புரிந்துக் கொள்வது என்னவென்றால் இப்போது நாம் மனம் என்றும், நம்மில் உள்ள உயர்ந்த ஆராயும் திறன் அதன் பகுத்தறிவே என்றும் நாம் நினைப்பது அதற்கு உபயோகப்படாது என்று புரிந்துக் கொள்வோம். அதை தாண்டிய நம் பகுத்தறிவை, பொதுபுத்தியை தாண்டிய வேறு ஒரு நோக்கம், சட்டம் ஆகியவற்றை வைத்து பார்க்க வேண்டிய ஒரு பார்வை நம் மனதிற்கு தேவை என்பது அப்போது நமக்கு புரியும். அதாவது நாமும் பிரமம்மே, நம் நோக்கமும் பிரம்ம நோக்கமே - அனைவரிடமும் அதுவே உள்ளது என்று ஏதாவது ஒரு உயர்சித்ததை  பெறும் போது நாம் அதிமனம் -  supermind -ஐ தொடுகிறோம்.

மாயை என்பது இரண்டு நிலை அதனிடையே இருப்பது ஒரு திரை என்று கற்பனை செய்தால் அந்த மனதின் நீட்சி நம் உயர்நிலை மாயைக்குள் அதை தாண்டி அதிமனதுக்கும் எடுத்துச் செல்லும். இது போன்ற இடங்களில் கர்மயோகி illusion என்று சொல்லாமல் - delusion  - உண்மையில்லாத ஒன்றை உண்மை என்று நம்பும் நிலையில் இருக்கிறோம் என்கிறார். உதாரணமாக நம் அபிப்ராயம், கருத்து, முன்முடிவுகள் போன்றவை நம் அனுபவத்தை ஒட்டியது. அந்த அனுபவம் உண்மை என்றாலும் அந்த கால கட்டம், அந்த சூழல், அன்றைய நம் அறிவு நிலை, அன்றைய செயல் கொடுத்த அனுபவம் அது.  அதை உண்மை என்று எடுத்துக் கொண்டு நம் எதிர்காலத்தை அணுகுகிறோம். அதற்கான சூழல், தேவை, அறிவு, நிலை, பலன் வேறு என்பது

நமக்கு நினைவுக்கு வருவதில்லை. இது அறியாமை அல்ல. அறிவை முழுமையாக பயன்படுத்தும் முறை தெரியவில்லை என்னும் நிலை. முதல் நிலை கீழ் நிலை மாயை. அடுத்த நிலை உயர் நிலை மாயை. உதாரணமாக விடாமுயற்சி என்பது நல்ல பண்பு தான். ஆனால் பெரும்பாலும் முன்பு செய்ததையே செய்துக் கொண்டு இப்போம். அல்லது அது சம்பந்தமாக பிறர் சொன்னது, செய்தது, படித்தது என்று கூட பின்பற்றுவோம். அது உயர்ந்த அறிவு என்றும் நினைப்போம். அது கீழ் நிலை மாயை. சரியான முறை என்னவென்றால் நாம் முன்பு செய்ததில் இருக்கும் தவறுகளைத் தவிர்த்து, அது ஏன் வந்தது என்பது புரிந்து, அது பலன் தராததற்கான காரணத்தை அறிந்து, அதற்கான சட்டங்களை அறிந்து, அதன் பின் அதை செய்வதே உயர் நிலை மாயை. அப்போது அதன் பெயர் விடாமுயற்சி அல்ல அர்ப்பணிப்பு. விடாமுயற்சியிலிருந்து அர்பணிப்புக்குச் செல்வது என்பது ஒரு பரிணாம வளர்ச்சி என்பதால் அது - அது வரை இழந்ததையும் சேர்த்துக் கொண்டு வரும். அதனால் தான் இந்த யோகத்தில் எதையும் விலக்கக்கூடாது என்கிறார் பகவான். கீழ் நிலை மாயைகளை, தோல்வியை, வலியை , துன்பங்களை ஏற்று அதை திருவுருமாற்றி முழுமை அடைய செய்து தான் அதை கடக்க வேண்டுமே தவிர அவற்றை விலக்கி , உதாசீனப்படுத்தி வர முயன்றால் பின்னால் அவை அடுத்த கட்டத்தில் இன்னும் பெரிதாக வந்து நம்மை வாட்டும். சற்று முன் சொன்ன நான் படிக்க வேண்டும் என்று எனக்கு வந்த வலிகள் இதற்கு உதாரணம். அதை செய்த பிறகு தான் அடுத்த கட்டத்திற்கு நகர முடியும். எல்லா வலிகள், துன்பங்கள், முரண்பாடு, சுமுகக் குறைவுக்குப் பின்னாலும் இறைவனின் லீலை இருக்கிறது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதுவே கீழ் நிலையில் - பற்றற்ற தன்மையையும், உயர் நிலையில் சமத்துவத்தையும் தரும். அதாவது எதனாலும் பாதிக்கப்படாத ஒரு நிலை நமக்கு வர ஆரம்பிக்கும். அதுவே வாழ்வனைத்தும் யோகம் என்று ஆகும். அந்த உயர்ந்த மாயையில் இருந்தும் வெளி வந்து ஆதியுடன் பிரம்மத்துடன் இணைந்து அதுவாகவே ஆக வேண்டும் என்பது இறுதி நோக்கம். அதுவே பிரம்மம் விரும்பிய ஆனந்தம். இதை நடைமுறைக்கு ஏற்றவாறு சொல்வதானால், என்னுள் அன்னை இருக்கிறார் என்பதை நம்புகிறேன், அவருக்கு பிடித்தது, அவர் விரும்பும் பண்புகளை கடைபிடித்தால் ஆனந்தம் என்றும் நம்புகிறேன். ஆனால் உண்மையில் நான் அறிந்த உயர்ந்த பண்புகளைக் கூட என்னால் ஒழுங்காக செய்ய முடியவில்லை. காரணம் எனக்கு யாரையும் பிடிக்கவில்லை. என்னால் யாருடனும் ஒத்துப் போக முடியவில்லை. நான் செய்வதே சரி. காரணம் அதுவே கர்மயோகி கூறிய உயர்சித்தம், சத்தியம், அன்னை விரும்பும் பண்பு. அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும், என் வழிக்கு

வர வேண்டும் என்று நினைக்கிறேன். எல்லோருள்ளும் அன்னை இருக்கிறார். முரண்பாடே உடன்பாடு, சுமுகக் குறைவே அழைப்பு என்பதை எல்லாம் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நாமறிந்த, நாம் உயர்ந்த இடத்தில வைத்திருந்த அன்பர்கள் சேவை செய்வதாக நினைத்தவர்கள் , ஒரு ஆன்மீக ஸ்தாபனத்தின் முதுகு எலும்பு என்று நாம் நினைத்தவர்கள் - இன்று சுயநலத்தின் மொத்த உருவமாக , அகந்தையின் உச்சத்தில் , பணத்தை சுருட்டுவதே குறியாக இருப்பதை பார்க்கும்போது - இவற்றை விட்டு விலகவே தோன்றுகிறது. கீழ் நிலை மாயை அத்தனை சக்தி வாய்ந்தது. ஆனால் அங்கு தான் பரிணாமத்திற்கான ஆற்றல் இருக்கிறது என்கிறார். இதற்கு உதவுவது மனம் என்பதன் உயர்ந்த நிலைகள். அதை வைத்து அது செய்யும் சிந்தனைகளை வைத்து அது செயலில் வெளிப்டுவதை வைத்து இந்த உலகை நம் வாழ்வை மனம் தான் படைத்தது, படைக்கிறது என்று நினைத்து விடுகிறோம். அதாவது நம் முன்னேற்றத்தை நம் மனதின் திறமையாக எடுத்துக் கொள்கிறோம். அதை அப்படியே கொண்டு போய் பிரம்மத்திற்கு ஒரு மனம் இருக்கிறது அது இப்படி ஒரு லீலையை செய்ய விரும்புகிறது. அதனால் இதுவெல்லாம் நடக்கிறது என்று ஆராயாமல் பொருத்தி ஏற்றுக் கொண்டால், நாம் மரபுள், மரபு சொல்லும் மாயைக்குள் போய் விடுவோம். நாம் வீடு கட்ட வேண்டும், கார் வாங்க வேண்டும், foreign tour போக வேண்டும் என்றெல்லாம் நினைப்பது மனம் விரும்பும் செயல்கள் என்று எடுத்துக் கொண்டால், அது எதற்காக அதை விரும்புகிறது என்று அது வெளிப்படும் நோக்கத்தைப் பற்றி சிந்தித்தால், இதன் மூலம் நாம் நினைக்கும் ஒரு ஆனந்தம் நமக்கு கிடைக்கும் என்று தான் அதை செய்ய விரும்புகிறோம். அது போல பிரம்மத்தின் நோக்கம் தன்னைத் தானே மறைத்து, தன்னை கண்டு பிடிக்கும் ஆனந்தமே அதன் பின் உள்ள நோக்கம் என்று புரிந்தால் - இந்த நோக்கம் தான் நம் வாழ்வின் imperfection களுக்கு, வரும் துன்பங்களுக்கு காரணம், இவையெல்லாம் பிரம்மம் தன்னை வெளிப்படுத்த விரும்பும் இடங்கள் என்று புரிந்தால் பிரம்மம் விரும்பும் perfection - செம்மை. அதன் மூலம் அது அடைய விரும்பும் ஆனந்தம் ஆகியவை புரியும். அதற்கு காரணம் நாம் தற்போது உபயோகப்படுத்தும் உயர்ந்த கருவியாக நினைக்கும் மனம் சொந்த ஞானம் படைத்தது அல்ல. அதனால் நம் மனதை பற்றி நன்றாகப் புரிந்துக் கொண்டு நாம் தான் அதை ஞானத்தை தேடும் கருவியாக மாற்ற வேண்டும் - படைக்கும் திறன் மனதில் இல்லை அதன் போக்கு நோக்கம், ஆகியவற்றில் இருக்கிறது அல்லது அதைத் தாண்டிய அடுத்த கட்ட மனதில் அதிமனத்தில் அல்லது சத்தியசித்தத்தில் இருக்கிறது என்பது புரிவது இரண்டு வகையான மாயையையும் தெய்வீக ஆனந்தத்திற்கான மாயை என்பதை புரிந்துக் கொள்ளும் வழி. அப்போது

தான் நாம் அடுத்த கட்ட creative idea , real idea படைப்பாற்றல் கொண்ட கருத்து, அசல் கருத்து ஆகியவற்றிற்கு செல்ல முடியும். அது சித் சக்தியின் ஒரு ஆற்றல் என்பதால் நமக்கான ஆனந்தத்தை நாமே படைக்க முடியும்.

நாம் பரிணாமத்தில் எப்படி வளர்கிறோம் என்றால் அதாவது evolve ஆகிறோம் என்றால், முதலில் இந்த பிரபஞ்சத்தில் சத்தியத்திற்கான ஒரு சட்டம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பது புரிகிறது. அடுத்தது அது அனைத்து இருப்பிலும் existence -லும் வெளிப்பட காத்துக் கொண்டு இருக்கிறது. அதை நம் மனத்தால் புரிந்துக் கொள்ள முடியாது. அதை நம் சித்தம், உயர் சித்தமே புரிந்துக் கொள்ள முடியும். காரணம் சத்தியத்தை பற்றிய உள்ளுறை ஞானம் அங்கே தான் இருக்கிறது. அது ஆற்றலாக மாற வெளிப்பட அதற்கு ஒரு தூண்டுகோல் தேவைப்படுகிறது. அது இறைவனுக்கான ஆர்வம், அல்லது ஏதோ ஒரு தேடலாக மாறுகிறது. குறைந்த பட்சம் அது துன்பம், வலி, முரண்பாடு, ஏமாற்றம், சுமுகக் குறைவு ஆகியவற்றிலிருந்து நாம் வெளியே வர வேண்டும் என்னும் அளவிற்காவது ஒரு ஆர்வமாக மாறுகிறது. அது அந்த ஆற்றலுக்கு சித்தத்தில் உயர ஒரு direction -ஐ திசையைக் கொடுக்கிறது. அது செயல், சூழல், வடிவங்களில் தன்னை வெளிப்படுத்தி அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்கிறது.

என் வாழ்வை நான் அலசி ஆராய்ந்ததில் நான் முன்னேற்றம் அல்லது ஆனந்தம் என்று நினைத்தவை அத்தனையும் அப்படித் தான் வந்து இருக்கிறது. நம்மை சுற்றியுள்ள சமுதாயம், பின் உலகம், பின் இந்த பிரபஞ்சம் என்று அனைத்திற்கும் ஒரு வடிவம் கொடுப்பது அதுவே. அப்படி வெளிப்படும் போது நாம் பெறும் சித்த முன்னேற்றம், நாம் ஏன் பிறந்தோம், நம் வாழ்வின் நோக்கம் என்ன,செல்ல வேண்டிய திசை என்ன என்பதை பிரம்ம நோக்கத்தை ஒட்டி Real Idea வை ஒட்டி organize செய்கிறது. அது அடுத்த கட்ட முன்னேற்றத்தை இறைவன் விரும்பும் பண்புகளால் பெற வைக்கிறது. அதை தரும் கருவியாக ஆற்றலாக இருப்பது இந்த மாயை என்பதால் அதை தெய்வீக மாயை என்கிறார் பகவான்.

அடுத்த அத்தியாயத்தை பற்றி அடுத்த கூடலில் பேசலாம்.